DEPOSITION OF WITNESS

Chapter XXIII code of Criminal Procedure

**IN THE COURT OF SESSIONS JUDGE,**

NAGAPATTINAM.

**Special. Sessions Case No. 5/2025**

**Deposition of Witness for Prosecution : P.W.11**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | பழனிவேல் | தகப்பனார் பெயர்/ கணவர் பெயர் | : | முத்து |
| ஊர் | : | அண்டக்குளம் | தாலுக்கா | : | குளத்துார் |
| ஜாதி | : | -- | வயது | : | 34 |
| மதம் | : | -- | தொழில் | : | பெயிண்டர் |

Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 day of 05.08.2026

**எதிரி ஆஜர் இல்லை. மனு அனுமதிக்கப்படுகிறது.**

**<u>முதல் விசாரணை</u>**

1. நான் தற்போது அண்டக்குளம் கிராமத்தில் வசித்து வருகிறேன். பெயிண்டராக வேலை பார்த்து வருகிறேன். இந்த வழக்கின் எதிரி வினோத்யை எனக்கு தெரியும். அ.சா.1 சதிஷ்குமார், அ.சா.2 அஞ்சலை, அ.சா.3 சுரேந்திரன், அ.சா.4 பூமணி ஆகியோர்களை எனக்கு தெரியும். அ.சா.9 ராஜேஷ்யை எனக்கு தெரியும். அ.சா.10 சக்தியை எனக்கு தெரியும். கடந்த 01.05.2025 அன்று நான் வெளிபாளையம் நெல் குடோனில் பெயிண்டராக வேலை பார்த்து கொண்டு இருந்த போது வேலையை முடித்து விட்டு கடற்கரையில் இருந்தேன். என்னை சூப்பரைவைசர் கால் செய்து வர சொன்னார். எதிரி

வினோத் என்பவர் பாலகிருஷ்ணனின் மீது கல்லை தூக்கி போட்டு என்று சொன்னார்.(செவி வழி சாட்சி என்று எதிரி தரப்பில் ஆட்சேபணை செய்யப்பட்டது. ஆட்சேபணைக்குட்பட்டு பதிவு செய்ப்பட்டது). சம்பவம் நடந்து மறுநாள் காலை வெளிப்பாளையம் காவல் நிலையத்தில் என்னையும், சூப்புரவைசரையும் அழைத்தார்கள். நான் நடந்த அனைத்து விவரத்தையும் கூறினேன். என்னிடம் காட்டப்படும் ஆவணத்தில்( சாட்சியிடம் எதிரியின் ஒப்புதல் வாக்குமூலம் காட்டப்பட்டது) அதில் உள்ள 1வது சாட்சி கையொப்பம் என்னுடையது. அது **அ.சா.ஆ.4/அ.சா.11** ஆக குறியிடப்பட்டது. போலீஸார் என்னை விசாரித்தபோது கையெழுத்து கேட்டதால் போட்டேன்.

**<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

2. என்னிடம் இந்த சம்பவம் குறித்து வினோத் கல்லை தூக்கி போட்டதாக சூப்ரவைசர் செல் மூலம் தெரிவித்தார். நாங்கள் அப்போது நாகப்பட்டினம் வெளிப்பாளையம் புதிய கடற்கரையில் தூங்கி கொண்டு இருந்தோம். என்னிடம் வினோத் கல்லை தூக்கி போட்டதாக சூப்ரவைசர் சொல்லவில்லை என்றும், வினோத் கல்லை தூக்கி போட்டதாக சொல்லவில்லை என்றும், இதை போலீஸார் சொல்லி கொடுத்து நான் தற்போது பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. நான் முதல் விசாரணையில் சொன்ன சங்கதிகளை மட்டுமே நான் போலீஸிடம் சொன்னேன் என்றால் சரிதான். என்னுடைய ஊருக்கும், நாகப்பட்டினம் வெளிப்பாளையத்திற்கும் 100 கிலோ மீட்டர் தூரம் இருக்கும்

**என்றால் சரிதான். நான் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.**

**மறுவிசாரணை** - இல்லை.

ஒப்பம்/-பழனிவேல்

சாட்சி கூறியதை என்னால் திறந்த நீதிமன்றத்தில் பதிவு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

ஒப்பம்/– T.H. Mohammed Farooq,
மாவட்ட/அமர்வு நீதிபதி,
நாகப்பட்டிணம்.